


தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் நடைபெற்ற கழக முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர்கள் ஆர்.எஸ்.பாரதி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இப்பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி, செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி. அய்யாராசு, க.நசீர்முகமது, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடு துறை மு.உத்திராபதி, மாநரக கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், திரளாக கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மறமடக்கி ஊராட்சி, பட்டா குளக்கரையில் 1,000 பனை விதைகள் நடும் நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 27.09.2025 அன்று கலந்து கொண்டு பனை விதைகள் நடவு செய்யும் பணியினை தொடங்கி வைத்தார். உடன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் செல்வி.அபிநயா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில்

# அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மொடக்குறிச்சி அன்பகம் அமைக்கும் பணி!

## கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. அறிக்கை!

ஈரோடு, அக்.2–



கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி அவர்களின் நல் வாழ்த்துக்களுடன், கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் படி ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் இன்று (02.10.2025 வியாழக்கிழமை) காலை 10:30 to 11. 00 மணி அளவில் ஈரோடு வெள்ளகோவில் மெயின் ரோடு, யூனியன் ஆபீஸ் அருகில் கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகிய எனது ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர், வீட்டு வசதி துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், கழக துணைப் பொதுச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ், கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, அப்துல் மாலிக், இளையராஜா, சீனிவாசன், கஜேந்திர பிரபு, ஜி.பி.ராஜா, அனந்தகுமார், மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வ.கதிர்வேல், மொடக்குறிச்சி பேரூர் கழக செயலாளர் பி.வி.சரவணன், மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர் பகுதி வார்டு கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜே.திருவாசகம், மாநகர அமைப்பாளர் கே.டி.சுதாகர்

இளைஞர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வார்டு, கிளைக் கழக அமைப்பாளர் முன்னிலையில் மொடக்குறிச்சியில் அன்பகம் கட்டிடம் கட்டும் பணி துவக்க விழா நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள், நிலைக்குழு தலைவர்கள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் ஒன்றியம் தி.மு.க.சார்பாக பல்வேறு மாற்றுக்கட்சியினர் 3,000 பேர் அக்கட்சியிலிருந்து விலகி வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சருமான எ.வ.வேலு முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி, அமைச்சர் இரா.ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி எம்.பி, தே. மலையரசன் எம்.பி, மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர் க.சுரேஷ்குமார், ஒன்றிய செயலாளர்கள் ஏ.விஜயகுமார், க. ரத்தினவேல், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கரூர் த.வெ.க. கூட்ட நெரிசலில் சிக்கி

# உயிரிழந்தவர் குடும்பத்திற்கும் - காயமடைந்தவர்களுக்கும் நிதி உதவி!

## செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. நேரில் வழங்கினார்!

கரூர்.அக்.2.

கரூரில் ஏற்பட்ட துயரச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் 5 நபர்களுக்கு தலா ரூ.1 லட்சத்திற்கான காசோலைகளையும், உயிரிழந்த 5 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10லட்சத்திற்கான காசோலைகளையும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி 28.09.2025 அன்று கூட்ட நெரிசல் காரணமாக உயிரிழந்தவர்களில் 18 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 10 லட்சத்திற்கான காசோலைகளை வழங்கியதைத் தொடர்ந்து,

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காயமடைந்து தீவிர சிகிச்சை பெற்று வரும் 5 பேருக்கு தலா ரூ.1 லட்சம் காசோலைகளையும்.

கரூர் ரெத்தினம்சாலை பகுதியைச் சேர்ந்த சுமதி (50), காமராஜபுரம் பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் (23), வேலுச்சாமிபுரம் பகுதியைச் சேர்ந்த பழனியம்மாள்(11), கோகிலா(14), சுகுணா (65), எல்என்.எஸ் கிராமம் பகுதியைச் சேர்ந்த திரு. ரவிகிருஷ்ணன் (32), உள்ளிட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று உயிரிழந்த நபர்களின் வீட்டிற்கு நேரில் சென்று அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10லட்சத்திற்கான காசோலைகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி வழங்கினார்.

முன்னதாக கரூர் பாரதி நகர் பகுதியை சேர்ந்த கவின் (31), பிச்சம்பட்டி பகுதியை சேர்ந்த விஜயராணி(42), அரவக்குறிச்சி குமராண்டான்வலசு பிருந்தா (21), தொக்கு பட்டி பகுதியைச் சேர்ந்த அஜிதா (20), வேலாயுதம் பாளையம் பகுதியை சேர்ந்த திருமதி ஜெயந்தி (45) உள்ளிட்ட பகுதிகளுக்கு உயிரிழந்த நபர்களின் வீட்டிற்கு நேரில் சென்று அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10. லட்சத்திற்கான காசோலைகளை அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி ஆகியோர் வழங்கினார்கள்.

மேலும் உயிரிழந்த நபர்களில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் அவர்களுடைய குடும்பத்தினரிடம் வழங்கப்பட இருக்கிறது.

இந்த நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் வெ.கவிதா, துணை மேயர் ப.சரவணன், மருத்துவக் கல்லூரி முதல்வர் புவித்தா, மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



கோவை கிராஸ்கட் சாலையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மாவட்டக் கழக அலுவலகத்தில் கோவை மாநகர் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர், தலைமைக் கழக பேச்சாளர், மொழிப்போர்த் தியாகி ஈஸ்வரி ராதாகிருஷ்ணனின் 2வது நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ் தலைமையில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாநகர் மாவட்ட துணை செயலாளர் கல்பனா செந்தில், கழக தீர்மானக்குழு உறுப்பினர் செல்வராஜ், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச் செழியன், துணை அமைப்பாளர் சரவணன், பிரபாகரன், ரத்தினகுமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணிகண்டன், இப்னுமசூது, வேலாண்டிபாளையம் பகுதி துணை அமைப்பாளர் பாலுமணி, வேலுமணி, ராதாகிருஷ்ணன், வட்டக் கழக செயலாளர்கள் சிவக்குமார், பொன்ராஜ், ஆர்.எஸ்.புரம் பூபாலன், விவேகானந்தன், வணங்காமுடி, செல்வம் மற்றும் ராதாகிருஷ்ணன், அசோக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சூலூர் எஸ்.எஸ்.பொன்முடி

### அக்டோபர் 2 (2012)



மாவட்டக் கழக துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் கழகச் செயலாளர் என்ற பொறுப்புகளை வகித்து, சூலூர் பகுதியில் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

சூலூர் பேரூராட்சித் தலைவர், நிலவள வங்கித் தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்,பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக மக்கள் பணியாற்றியவர்.

1986ஆம் ஆண்டு முதல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தமிழ்நாடு அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. நிர்வாகிகள்

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. (பதிவு எண். 3284/CNI, பேரவை இணைப்பு எண். 1000) நிர்வாகிகள் கூட்டம் 28.08.2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்படி தமிழ்நாடு அனைத்து அமைப்பு சாரா தொ.மு.ச.நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

**சங்க நிர்வாகிகள்**

**மாநிலத் தலைவர்** – ராஜா குப்புசாமி

**துணைத் தலைவர்கள்** – 1) நா.மலைக்கண்ணு (இராமநாதபுரம்), 2) செ.தங்கமுத்து (ஈரோடு), 3) எஸ்.தமிழ்செல்வி (நாமக்கல்), **பொதுச்செயலாளர்** – இரா.பொன்னுராம்

**துணைப் பொதுச்செயலாளர்கள்** 1) வி.மோகன் (கிருஷ்ணகிரி), 2) வி.எஸ்.மோகன் (தஞ்சாவூர்), 3) க.பிரபாகரன் (கோவை), **பொருளாளர்** – ஜெ.பழனி

**இணைச் செயலாளர்கள்** : 1) லெட்சுமி நாராயணன் (தர்மபுரி), 2) ஆர்.ரெங்கசாமி (திருப்பூர்), 3) தமிழ்ச்செல்வி ஆனந்தன் (திருச்சி), 4) பீட்டர் ரூபன்ஸ் (பொள்ளாச்சி)

**அமைப்புச் செயலாளர்கள்** – 1)த.சுமதி (சென்னை), 2) சர்புதீன் (நெல்லை) பிரச்சாரச் செயலாளர்கள் 1) சி.டிசி. துரைசாமி (கோவை), 2) அந்தோணிராஜ் (திருப்பூர்), 3) ஜெ.சுரேஷ்பாபு (சென்னை) 4)ஏ.ஏஆறுமுகம், (திருவண்ணாமலை)

**வட்டாரச் செயலாளர்கள்:** 1) சி.பாஸ்டின் அந்தோணிராஜ் (தஞ்சாவூர்), 2) எஸ்.உண்ணாமலை (அரூர்), 3) கே.சுதா (திருவள்ளூர்), 4) எம்.ஏ.ராமர் – மதுரை, 5) வெ.கலைநேசன் (வேலூர்), 6) யசோதா (கிருஷ்ணகிரி), 7) ஜாஸ்மின் (நீலகிரி), 8) பெப்சி கண்ணன் (செங்கல்பட்டு),

**மு.சண்முகம்,** Ex.MP)
**பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை**

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அனைத்து மாநகராட்சிகள் பொதுஊழியர்கள் முன்னேற்றச் சங்க (பதிவு எண். 3410/TRI, பேரவை இணைப்பு எண்.629) த்தின் மாநிலத் தலைவராகப் பொறுப்பு வகித்து வந்த திரு. வே.பாபுமாணிக்கராஜ் அவர்கள் மறைவெய்தியதையொட்டி, மாநிலத் தலைவர் பதவியில் ஏற்பட்ட காலியிடத்திற்கு சங்கத்தின் சட்டவிதிகளின்படி நிர்வாகக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, திரு. G.மணிவேலன் அச்சங்கத்தின் மாநிலத் தலைவராக நியமனம் செய்யப்படுகிறார் ஏற்கெனவே பொறுப்பிலுள்ள நிர்வாகிகள் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப்படு கிறது.

**மு.சண்முகம்,** Ex.MP)
**பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரபாண்டி ஆ. இராஜா

### அக்டோபர் 2 (2021)



தனது இளமைப் பருவத்திலேயே தனது தந்தையாகிய வீரபாண்டியாரின் வழியில் கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்டச் செயலாளர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “சேலம் மண்டலத்தில் கழகம் வளர்க்கும் வீரனாக வலம் வந்த தம்பி வீரபாண்டி ராஜா” என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**